**சுருக்கம்**

உயர்கல்வி – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்தி அறிவிப்பு நாள் 23.07.2020 – கொரோனா நோய் தொற்று காரணமாக இளங்கலை / முதுகலைப் பட்டப்படிப்பில் பருவத் தேர்வு நடத்துவதிலிருந்து விலக்கு அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**உயர்கல்வித் (கே2)துறை**

அரசாணை (டி) எண்.111

**நாள் 27.07.2020**
**சார்வரி வருடம் , ஆடி 12**
**திருவள்ளுவராண்டு 2051.**

படிக்கப்பட்டவை :–

1. அரசாணை (டி) எண்.94, உயர்கல்வித் (கே2) துறை, நாள் 04.07.2020.
2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள் 23.07.2020.

---

ஆணை:–

கொரோனா நோய் தொற்று காரணமாக பல்கலைக்கழக மானியக் குழுவின் வழிமுறைகளின்படி, பருவத் தேர்வு நடத்துவது தொடர்பான வழிமுறைகள் வகுப்பது தொடர்பாக உயர்மட்டக் குழு ஒன்றினை அமைத்து மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது. கொரோனா வைரஸ் தொற்று காரணமாக தேர்வு நடத்த இயலாத நிலை உள்ளதாக அக்குழு தன்னுடைய பரிந்துரையை தெரிவித்துள்ளது.

2. இக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 23.07.2020 அன்று பின்வரும் செய்தி அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள் :–

“மாணாக்கர்களின் நலன் கருதி, பல்கலைக்கழக மானியக் குழு (UGC) மற்றும் அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் (AICTE) ஆகியவற்றின் வழிகாட்டுதலின்படி, மதிப்பெண்கள் வழங்கி,

- முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு கலை மற்றும் அறிவியல் இளங்கலை பட்டப்படிப்பில் பயிலும் மாணாக்கர்களுக்கும் மற்றும் பலவகை தொழில்நுட்பப் பட்டயப் படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கும்,
- முதுகலைப் பட்டப்படிப்பில் முதலாம் ஆண்டு பயிலும் மாணாக்கர்களுக்கும்,
- இளநிலை பொறியியல் பட்டப்படிப்பில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணாக்கர்களுக்கும்

- முதுநிலை பொறியியல் பட்டப்படிப்பில் முதலாம் ஆண்டு பயிலும் மாணாக்கர்களுக்கும்,

- அதேபோன்று எம்.சி.ஏ. முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு பயிலும் மாணாக்கர்களுக்கும்

இந்தப் பருவத்திற்கு மட்டும் தேர்வில் இருந்து விலக்கு அளித்து அடுத்த கல்வி ஆண்டிற்குச் செல்ல அனுமதி அளிக்கப்படும்".

3. அதன்படி, கொரோனா நோய் தொற்று காரணமாக இந்த பருவத்திற்கு மட்டும் பல்கலைக்கழக நிதி நல்கை குழு மற்றும் அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம் அளித்துள்ள வழிகாட்டுதலின்படி கீழ்க்கண்ட மாணாக்கர்கள் தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கு அளித்து அடுத்தக் கல்வியாண்டிற்குச் செல்ல அரசு அனுமதி அளிக்கிறது.

- முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு கலை மற்றும் அறிவியல் இளங்கலை பட்டப்படிப்பில் பயிலும் மாணாக்கர்கள் மற்றும் பலவகை தொழில்நுட்பப் பட்டயப் படிப்பு பயிலும் மாணாக்கர்கள்,

- முதுகலைப் பட்டப்படிப்பில் முதலாம் ஆண்டு பயிலும் மாணாக்கர்கள்,

- இளநிலை பொறியியல் பட்டப்படிப்பில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணாக்கர்கள்,

- முதுநிலை பொறியியல் பட்டப்படிப்பில் முதலாம் ஆண்டு பயிலும் மாணாக்கர்கள்,

- அதேபோன்று எம்.சி.ஏ. முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு பயிலும் மாணாக்கர்கள்

4. கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்றி மாணாக்கர்களுக்கு தேர்வு மதிப்பெண்கள் வழங்கப்படும்:-

சென்ற பருவத்தில் மாணாக்கர்கள் பெற்ற புற மதிப்பீட்டு மதிப்பெண்களிலிருந்து 30 சதவீதமும், இந்த பருவத்தின் அக மதிப்பீடு அல்லது தொடர்ச்சியான அக மதிப்பீட்டிலிருந்து 70 சதவீத மதிப்பெண்களையும் கணக்கில் எடுத்து 100 சதவீத மதிப்பெண்களுக்கு கணக்கிடப்பட்டு முதன்மைப் பாடங்களுக்கும் மொழிப் பாடங்களுக்கும் மதிப்பெண்கள் அளிக்கப்படும்.

துணைப்பாடங்கள் மற்றும் விருப்பப்பாடங்களுக்கு 100 சதவீதம் அக மதிப்பீட்டின் அடிப்படையில் மதிப்பெண்கள் அளிக்கப்படும்.

செயல்முறை தேர்வு நடத்தபடாமலிருந்தால் ஆய்வக பதிவேட்டின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

மாணாக்கர்கள் இதற்கு முந்தைய பருவத்தில் தேர்ச்சி பெறாமல் இருந்தால் அத்தேர்வுகளைப் பின்னர் எழுதவேண்டும்.

தொலைதூரக் கல்வியைப் பொறுத்தவரை மேற்கண்ட நடைமுறை பின்பற்றப்படும்.

தொலைதூரக் கல்வியில் எங்கெல்லாம் அக மதிப்பீடு இல்லையோ, அங்கே அனைவருக்கும் குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண்கள் வழங்கப்பட்டு அனைவரும் தேர்ச்சி பெற்றதாக அறிவிக்கப்படும்.

இந்த மதிப்பீட்டு முறையில் உடன்பாடு இல்லாத மாணவர்கள் பின்னர் நடத்தப்படும் தேர்வில் பங்குபெற்று அவர்களின் மதிப்பெண்களை உயர்த்திக் கொள்ளலாம்.

இந்த கோவிட்-19 ல் உள்ள கடினமான சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு மதிப்பெண்கள் குறைவாக உள்ள மாணவர்களுக்கு கருணை மதிப்பெண்கள் அளித்து அவர்களையும் தேர்ச்சி பெற்றதாக அறிவிக்கப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வா
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25.
கல்லூரிக் கல்வி இயக்குநர்(மு.கூ.பொ), சென்னை-6.
தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக்கழக பதிவாளர்கள்
அனைத்து பொறியியல் / பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் (தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் வழியாக)
அனைத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் / கல்வி நிறுவனங்கள் (கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக)
செயலாளர், பல்கலைக்கழக மானியக்குழு , புதுடில்லி
செயலாளர், அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி குழுமம், புதுடில்லி.
<u>நகல்</u>
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
முதன்மைச் செயலாளர், உயர்கல்வித் துறை அவர்களின் நேர்முக உதவியாளர்
முதன்மைச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு துறை, சென்னை-9.
செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை-9,
இ.கோ/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

27/7/20
பிரிவு அலுவலர்
27/7/2020